

மங்கையர்க்கரசியார் மகளிர் இல்லம்



# முளை
# 03

முளை 3

**சஞ்சிகை செயற்திட்ட ஆசிரியர்கள்**

து. கௌரீஸ்வரன்,  ச. ஸ்ரெனா,  ரா. நிரோஜா
மூன்றாவதுகண்
உள்ளூர் அறிவு திறன் செயற்பாட்டுக் குழு
மட்டக்களப்பு.

**அட்டை, நூல் வடிவமைப்பு, படங்கள்**

ஓவியர். சுசிமன் நிர்மலவாசன்

**கணினிப்பதிப்பு**

த. சங்கர்

**அச்சுப்பதிப்பு**

வணசிங்கா அச்சகம்,
திருமலைவீதி, மட்டக்களப்பு.

**வெளியீடு**

மூன்றாவதுகண்
உள்ளூர் அறிவு திறன் செயற்பாட்டுக் குழு
மட்டக்களப்பு.
கார்த்திகை – 2007

அட்டைப்படம், ஓவியர். சுசிமன் நிர்மலவாசன்
சிறுவர்களுடன் இணைந்து மேற்கொண்ட
தொடர் ஓவிய கலையாக்கச்செயற்பாட்டின் ஒரு பகுதியாகும்

மூன்றாவதுகண் உள்ளூர் அறிவு திறன் செயற்பாட்டுக் குழு, Ai.Bi. - Associazione Amici dei Bambini, (Association Friends of Children) மட்டக்களப்பு மாவட்ட சிறுவர் நன்நடத்தை திணைக்களம் என்பவற்றுடன் இணைந்து பதினான்கு சிறுவர் இல்லங்களில் நடாத்தி வரும் சிறுவர் கலையாக்கச் செயற்பாடுகளின் ஓர் அம்சமாக மட்டக்களப்பு மங்கையர்க்கரசியார் மகளிர் இல்லத்துச் சிறுவர்களது ஆக்கங்களைத்தாங்கி இச்சஞ்சிகை வெளிவருகின்றது.

# வாழ்த்துச் செய்தி

முளை, சிறுவர்களுள் உள்ளுறைந்து கிடக்கும் படைப்பாற்றல்களை எழுத்து வடிவில் வெளிக்கொண்டு வரும் மூன்றாவது கண்ணின் வாகனம்.

மூன்றாவது கண் உள்ளூர் அறிவுதிறன் செயற்பாட்டுக்குழு சிறுவர்களுடன் இணைந்து முன்னெடுக்கும் கலையாக்கச் செயற்பாட்டின் ஒரு பகுதியாக எழுத்துக்களின் ஊடாக படைப் பாற்றல்களை வெளிக்கொண்டுவருதல் இடம்பெறுகிறது.

எழுத்தின் ஊடாகப் படைப்பாற்றல்களை நிகழ்த்துதல் வெளிப்பாட்டு முறையாகவும் சிகிச்சை முறையாகவும் விளங்குகிறது.

எழுத்து அறிவின் அடையாளமாகவும் அதிகாரமயப்பட்டிருக்கிறது. எழுத்தை ஆள்பவர் அறிவுடையோராக நவீன அறிவுலகம் கற்றுக் கொடுக்கிறது.

எழுத்தை அறியாதவர், எழுதத் தெரியாதவர் படியாதவராகப், படிப்பறி வற்றவராக கீழ்நிலைப்படுத்தப் பட்டிருக்கிறார்.

பேச்சும் பேச்சறிவும் அதிகாரமற்றதாக்கப்பட்டடிருக்கிறது. பேச்சும், பேச்சறிவும் படிப்பறிவின்மையின் வாகனமாக்கப்பட்டிருக்கிறது.

அடிப்படையில், எழுத்து அதிகாபூர்வ வாகனமாகி இருக்கிறது. "எழுத்தில் இருக்கா? எழுத்தில் இருந்தாத்தான் செல்லும்!" என்று பேசுவது சர்வசாதாரண மாயிருக்கிறது.

எண்ணும் எழுத்தும் (மட்டுமா) கண்ணெனத்தகும்! பாட்டும் தாலாட்டும், விளையாட்டும், பேச்சும், பீடிகையும், நடனமும் நாடகமும், சைகையும், தொடுகையும், முகபாவமும், சிற்பமும் சித்திரமும், வெருட்டியும் என்று பல்வேறுபட்ட வெளிப்பாட்டு முறைகளுள் ஒன்றாகவே எழுத்தையும் மூன்றாவதுகண் கொண்டாடுகிறது.

அந்தவகையில் பல்வேறுபட்ட வெளிப்பாட்டு முறைகளுள் ஒன்றான எழுத்து ஊடகத்தின் ஊடாக வெளிக்கொண்டு வரப்பட்ட, சிறுவர் இல்லங்களில் வாழும் சிறுவர்களது படைப்பாற்றல்கள் இந்த முளை சஞ்சிகையில் ஊர்வலம் வருகின்றன.

**சி. ஜெயசங்கர்,**
இணைப்பாளர்,
மூன்றாவது கண் உள்ளூர்
அறிவு திறன் செயற்பாட்டுக் குழு.

# வாழ்த்துச் செய்தி

"அன்பில்லார் எல்லாம் தமக்கு உரியார் அன்பு உடையார்
என்பும் உரிய பிறர்க்கு"

வடக்கு கிழக்கு மாகாணத்தில் கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக இடம் பெற்று வரும் உள்நாட்டு போர் மற்றும் இடம் பெயர்வுகள் காரணமாகவும் 2004 டிசம்பரில் ஏற்பட்ட சுனாமி இயற்கை அனர்த்தம் காரணமாகவும் எமது சிறார்கள் எதிர் கொண்ட, எதிர்கொண்டுவரும் துன்பங்கள் சொல்லில் அடங்கா இவ்வாறான சிறுவர்களுக்கு அன்புக்கரம் நீட்டி போதிய பாதுகாப்பையும் பராமரிப்பையும் வழங்குவதில் தன்னார்வ தொண்டர் சிறுவர் இல்லங்களின் பங்களிப்பு அளப்பரியவை. இவை பாராட்டுக்குரியவை எனினும் சிறுவர்கள் சமூகமயமாக்கப்படுதல் இன்றியமையாததொன்றாகும். எனினும் இச் சமூகமயமாக்கலில் சிறுவர் இல்லங்கள் பல சிக்கல்களை எதிர்கொண்டுவந்தன. இதற்கு உதவும் வகையில் எமது திணைக்களம் மட்டக்களப்பு மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு (DCPC) மூன்றாவதுகண் உள்ளூர் அறிவுதிறன் செயற்பாட்டுக்குழு ஆகியன ஒன்றிணைந்து Amici dei Bambini (Friends of Children) எனும் இத்தாலிய நாட்டு நிறுவனத்தின் நிதி அனுசரணையோடு 2007 பெப்ரவரி மாதம் தொடக்கம் நடாத்தி வரும் விசேட செயற்திட்டத்தின் இறுதி நிகழ்வில் சிறுவர்களின் ஆக்கங்களை தாங்கி வரும் இந்நூல் வெளியீட்டில் எனது வாழ்த்துச்செய்தியை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

சிறுவர்களுக்காக பணியாற்றும் எந்தவொரு அமைப்பும் அவை "சிறுவர்களின் உச்சநலன்" (The best Interest of Children) எனும் கருப்பொருளை வைத்தே செயற்படுகின்றன. இவ்வாறு சிறுவர்களின் உச்சநலன் பேணப்படவேண்டுமாயின் அவர்கள் சமூகத்தோடு சேர்ந்தே வாழவேண்டும். இதனை ஊக்கப்படுத்தும் நோக்குடனேயே எமது திணைக்களம் செயற்படுகின்றது. இதற்கு தேவையான நடவடிக்கைகளை எமது திணைக்களம் நேரடியாகவும் பல்வேறு நிறுவனங்களின் நிதி அனுசரணையோடும் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

சிறுவர்களை சமூகமயமாக்கச் செயற்படுத்தி வரும் இவ்வேளையில் சிறுவர்கள் என்றும் சமூகத்தோடு இணைந்து வாழ வாழ்த்துகின்றேன்.

திருமதி. ரஞ்சினி நடராஜபிள்ளை
பணிப்பாளரும் ஆணையாளரும்
சமூக சேவைகள், சிறுவர் நன்னடத்தைப்
பராமரிப்புச் சேவைத் திணைக்களம்.
கிழக்கு மாகாணம்

# வாழ்த்துச் செய்தி

Amici dei bambini நிறுவனம் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறுவர் இல்ல பிள்ளைகளின் மேம்பாடுகளை மையமாக வைத்து "Children of Hope" என்ற திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

சிறுவர் இல்ல பிள்ளைகளது திறன்களை வெளிப்படுத்தி சமுதாயத்துடன் இணைந்து வாழ்வதற்கான நிலையை உருவாக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்த வகையில் மூன்றாவதுகண் உளளூர் அறிவு திறன் செயற்பாட்டுக் குழுவின் இணைப்பாளரும் சிரேஸ்ட விரிவுரையாளருமாகிய திரு. S. ஜெயசங்கர் அவர்கள் பிள்ளைகளின் திறன் அபிவிருத்தி தொடர்பான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியதன் மூலம் பிள்ளைகள் தங்களிடம் முடங்கிக்கிடந்த ஆற்றல்களை சமுதாயத்தின் முன் வெளிப்படுத்துவதற்குரிய சந்தர்ப்பம் உருவாக்கப்பட்டமை வரவேற்கத்தக்க அம்சமாகும்.

சுகாதார மேம்பாடு சம்பந்தமாக குழந்தை வைத்திய நிபுணர் திருமதி. சாந்தினி கணேசன் அவர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்பாடானது பிள்ளைகளின் பராமரிப்பு தொடர்பாக முன்னேற்றகரமான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு வழிவகுத்துள்ளது.

திணைக்கள நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்பான பணி திட்டத்தினை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தி சிறுவர் இல்ல முகாமையாளர்களின் நல்லுறவை பலப்படுத்தி சிறுவர் இல்ல பிள்ளைகளை எதிர்காலத்தில் சமுகமயமாக்குவதற்கு வழிவகுத்தது இத்திட்டத்தின் முக்கிய நிகழ்வாகும்.

திட்டத்தினை சிறுவர் நன்னடத்தை திணைக்களத்தின் அனுசர ணையுடன் அமுல்படுத்தி இதன் சாராம்சத்தை நூல் வடிவில் வெளியீடு செய்த Amici dei bambini நிறுவன உத்தியோகத்தர்களுக்கும், மூன்றாவது கண் உள்ளூர் அறிவுதிறன் செயற்பாட்டு குழு இணைப்பாளர் திரு. S. ஜெயசங்கர் அவர்களுக்கும், அவரது குழுவினருக்கும் எமது திணைக்களம் சார்பாக பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

செல்வி. T. ஞானசௌந்தரி,
மாவட்ட சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்,
மட்டக்களப்பு.

## Children of Hope – Seeds of Hope

When we, Amici dei Bambini - Friends of Children, planned the project " Children of Hope" in 14 Welfare Homes of Batticaloa district, We wanted to offer to the Department of Probation and Child Care Services support and resources for the children who live outside their families, thanks to many Italian families who have decided to sponsor the project.

Resources to improve the life and the well – being of children in welfare homes of this district, who once more are the fragile victims of war and natural disaster.

A child in a welfare home can receive a roof under which to sleep, books to study, food to grow - up . But a child in Welfare Homes misses something that is very important, and at the basis of his or her life.

A child in Welfare Homes misses a family. A father and a mother. That child misses the everyday love that only a mother and father can give, accompanying him or her in that so difficult but so beautiful path called LIFE...

And that child feels more insecure, more vulnerable, more fragile without feeling that unique and inimitable human being that only a son or a daughter are.

That's why the recreational activities planned with Third Eye local Knowledge and skill Activist group in Welfare Home have been so welcomed by us. With the help of animators, children have had the possibility to express themselves, to become more self – confident and to share with the others their emotions.

Through games, handicraft activities, drama performances and songs, during these mother children have learnt to become creators. Little artist, and they got aware about their in progress abilities. They have discovered how things can change if they work on them, and this is a essential step in experiencing their life.

This book is a demonstration of how much the children were involved and enjoyed the activities, and how much they need support of someone who can help them to grow up in order to become a woman and a man, who can still hope for a better future.

**Lucia Pantella**

## Creation of "Mulai"

The children are the victims of war and poverty. They are mostly affected by it, and they face many problems, both physicaly and mentaly. The book " MULAI" is the reflection of the feelings of these children who are living in the welfare homes, facing the difficulties of the community and the changes of the world. The book has brought forward the emotions of the children.

The publication have the major part to express the life style and the difficulties of the people in the form of Drama, Stories and documentation. The publication had brought up with the collaboration of Third Eye local Knowledge and skill Activist group with the support of Amici dei Bambini (Friends of Children)

This International Ngo had been works specially for the children after the natural Disaster "Tsunami" with lots of effort with kinds of activities.

we are proud to be one of the employers of this Organization to save the children of our community.

**Arun and Christopher**

# ஆசிரியர் குறிப்பு

இன்றைய சூழலில் வளரும் சிறுவர்கள் மத்தியில் ஒரு கட்டுரையினையோ, கவிதையினையோ அல்லது கதையொன்றினையோ எழுதும்படி கேட்டால், மிகப்பெரும்பாலும் அவர்கள் வேறு பிரசுரங்களிலிருந்து பார்த்து எழுதியோ, அல்லது பிறரிடம் சென்று அவர்களுக்கூடாக எழுதுவித்து வருவதனையோ, அவதானிக்க முடிகின்றது.

இந்தச் சுயாதீனமற்ற எழுத்தாக்கச் செயலுக்கு அடிப்படையான காரணிகளுள் ஒன்றாக, நவீன கல்வி முறைமை கொண்டுள்ள குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டு விமர்சிக்கப்படுகின்றன.

இந்தச் சூழலில், சிறுவர்களிடையே சுயமாகச் சிந்திப்பதற்கான, சுயமாக எழுதுவதற்கான, சுயமான எழுத்தாக்கங்களை உருவாக்கி வளர்த்தெடுப்பதற்கான செயற்பாடுகளில் ஈடுபடவேண்டியது அவசியமாகின்றது.


இந்தவகையில் மூன்றாவதுகண் உள்ளூர் அறிவுதிறன் செயற்பாட்டுக் குழுவினராகிய நாம் சிறுவர்களுடனான் கலையாக்கச் செயற்பாடுகளில் ஈடுபடும்போது, சிறுவர்களிடையே உள்ளுறைந்து கிடக்கும் படைப்பாற்றல்களை எழுத்து வடிவில் வெளிக்கொண்டுவரும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றோம்.

இந்த வரிசையில் சிறுவரில்லங்களில் வாழும் சிறுவர்களுடனான எமது கலையாக்கச் செயற்பாடுகளில் ஓரம்சமாக மட்டக்களப்பு மங்கையர்க்கரசியார் மகளிர் இல்லச் சிறுவர்களின் படைப்பாக்கங்களை எழுத்துவடிவில் தாங்கி இந்த முளை - 03 வெளிவருகின்றது.

சிறுவர்கள் சுயமாக எழுதும்போது அவர்களுடைய படைப்பாக்கத் திறன்களும், அவர்களது உலகப்பார்வையும், அவர்களின் உள்மன உணர்வுகளும் வெளிப்படுகின்றன. இதனூடாக ஆக்கபூர்வமான எதிர்காலச் சந்ததிகளை உருவாக்கிக் கொள்ள வாய்ப்பேற்படுகின்றது.

**து. கௌரீஸ்வரன்**
மூன்றாவது கண் உள்ளூர்
அறிவு திறன் செயற்பாட்டுக் குழு.

# அன்னை



பத்து மாதம் சுமந்து
பக்குவமாய் என்னை
பெற்றெடுத்த அன்னையே!

எந்த பாசம்
என்னை விட்டு விலகினாலும்
தாய்ப்பாசம் என்பது
என்னை விட்டு விலகாது
தாய் ஆனவள் எனக்காக
எவ்வளவு துன்பங்களை
தாங்கிக் கொண்டு வாழ்கிறாள்.

பத்து மாசமும்
அவள் படும் துன்பத்திற்கு
நான் பத்தாயிரம் ஆண்டுகள்
உதவி செய்தாலும்
அந்தக் கடன் தீராது
தாயின் பாசத்திற்கு
அளவே கிடையாது
நான் முதல் முதற்
கண்ட தெய்வம் என் அன்னையே!
அன்னை இல்லை என்றால்
இந்த உலகில்
வாழ முடியாது அன்னையே!
இந்த உலகின் முதல் தெய்வம்.

**கே. வாணி**
தரம் - 11

# காத்திருக்கிறேன்!

அன்பை அள்ளி உணர்த்தும்
அம்மா தாயே
என்னை நீங்கள்
ஏக புதல்வியாய் பெற்றெடுத்து
பல வருடங்கள் கழிந்து விட்டன
ஆண்டுகள் கடந்தாலும்
நாட்கள் ஓடினாலும்
பசுமரத்தாணி போல்
நீங்கள் எனக்கு ஊட்டிய
அன்பு இன்னும்
கலங்கவில்லை - அம்மா

அம்மா நீ என்னைப் பத்து மாதம்
சுமந்து பெற்று எடுத்தாய்
பத்து வருடங்களே
உன் அன்பைப் பெற்றேன்
நீ என்மீது சொரிந்த அன்புக் கடலை
மீண்டும் உங்களிடம் சொரிவதற்காக
நாட்களையும் வருடங்களையும்
எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்
தாயே.

ம. ரேனிதா



# அன்னை

பத்து திங்கள்
உன் பாசச் சிறைக்குள் வைத்திருந்து
பரிவுடனே என்னை உலகிற்கு எடுத்த
பாசமுள்ள அன்னையே
உன்னுயிரையே என்னுயிராக்கினாய்
உனது இந்த உயர்ந்த தியாகத்தை
அந்தக் கர்ணன் நினைத்தால் கூட
செய்ய முடியாது
என்னுயிர் அன்னையே.

**எஸ். வினோதினி**
தரம் - 12

# தாய்

தாயின் மடி தான்
எமது முதற்
பள்ளிக் கூடம் - இதை
காலமுள்ளவரை
உயிருள்ளவரை
மறந்து விடாதீர்கள்.

**ஏ. நிஷானி**
தரம் - 09



# நட்பு

நட்பு என்றது சிலருக்கு
பூப்போன்றது
ஏனெனில் அவர்கள்
சேர்ந்திருப்பதனால்
நட்பு என்றது சிலருக்கு
தாய் போன்றது
ஏனெனில் நன்றியுடன்
வாழ்வதனால்
நட்பு என்றது சிலருக்கு
கசப்பானது
ஏனெனில் அவர்களின்
புரிந்து கொள்ளாத்
தன்மையினால்.


**எஸ். வினோதினி**
தரம் - 12

# இல்லத்தின் நிழலிலே நான் . . .

மண்ணிலே பிறந்து வந்ததும்
முதன் முதல் பார்த்த முகம்
எனதருமைத் தாயினது - அந்தோ
என் தந்தையின் முகம் கூட
அறியாது திக்கற்றவளாய் சொந்தங்களுடன்
வாழ்ந்த அந்த தருணமதை
எண்ணிய போது சுமை கனக்கவில்லை -
இப்போது
இல்லத்தின் நிழலிலே நான் . .

கல்வி அறிவு சிறிதாக இருந்தாலும்
என்னை முழுமையாக்கியது என்
கண் போன்ற கருணை இல்லமிதாம்
மங்கையர்க்கரசியார் மகளிர் இல்லம்
அன்பின் சின்னமாய் சகோதரிகளுடன்
நட்பின் அடையாளமாய் நண்பிகளுடன்
அறிவுக்கு ஆதரமாய் பெரியாருடன் -
இப்பொழுது
இல்லத்தின் நிழலிலே நான் . .

அன்பு பாசம் அரவணைப்பு அனைத்துமே
கற்றுத் தந்தது இக் கருணை மிக்க இல்லம்
எதிர்காலம் சிறப்படைய நல்வழி காட்டும்



என் இல்லம் என் மனக்கோயில் தனில்
விட்டழியாது சிதைந்து போகாது கடைசி வரை
எப்போதும் இல்லத்தின் நிழலிலே நான்
வாழ்க! ஒளியுடன் இவ்வில்லம்
திகழ்க! இவ்வில்லத்தின் புகழ்ச்சி.


எஸ். சரண்யா
தரம் - 12

# யுத்தம் ஒழிய வேண்டும்

எங்கள் வாழ்க்கையில்
யுத்தம் ஒழிய வேண்டும் - என்றும்
சமாதானம் நிலைத்து நிற்க
வேண்டும்.
சின்னஞ்சிறு பிள்ளைகள்
இன்று கண்ணீரில்
தத்தளித்து வருகிறார்கள்.
(எங்கள் வாழ்க்கையில் . . . . .)

அழகாகப் பெற்றெடுத்த
அன்னை இல்லையே - எம்மை
அன்பாகப் பேணி வந்த
தந்தை இல்லையே
எங்கள் உறவுகள் இன்னும்
கிடைக்கவில்லையே (2)
எங்கள் ஏக்கத்தைக்
கடவுளே தீர்த்து வைப்பாரா?
(எங்கள் வாழ்க்கையில் . . . . .)

அன்று வீதி எங்கும்
தோரணங்கள் கட்டப்பட்டது
இந்த அழகான ஓடையில்
தண்ணீரோடியது
இன்று வீதி எங்கும்
உறங்கி கிடக்கின்றது.
இந்த அழகான ஓடையில்
செந்நீர் ஓடியது.



ஆர். இரேஜினி
தரம் - 9

# தாய்க்கு ஓர் மடல்

வெளி நாட்டில் இருக்கும் என் உயிர் அம்மாவுக்கு நான் நலம் என்று இம்மடலை வரைவதை விட இன்னும் உயிரோடு இருக்கிறேன் என தொடங்குவதே சரி, ஏன் என் உயிருக்கு இங்கே என்ன உத்தரவாதம் இருக்கு.

அருகிருந்து ஆறுதல் அளிக்க அன்பு அரவணைப்பை பெற என்றுமே தங்களை பிரியாதிருக்க எனக்கோ அது அர்த்தமற்றதாகிற்று நெடுந் தொலைவில் எனக்காக நீங்களும் இங்கு உங்களுக்காக நானும் காத்து களைத்து போயிருக்கும் இந்நாள் விலகுவது எனைவிட்டு எந்நாளோ?

தனிமையின் புலம்பல்கள், எண்ணங்கள் வடிக்கின்றேன் கவி வடிவில் மடல் தனை எழுத என் மனம் ஒப்பவில்லை அதனாலே – இதனை இம் மடலை கவி வடிவில் வரைகின்றேன். எப்படி சுகம் அம்மா ! நீ அங்கு எந்நிலையோ. அந்நிலையே இங்கு எனக்கும் எண்ணி அமைதி கொள் என் ஆசை அம்மாவே.

**ஆர். கிருஷ்ணவேணி**
தரம் - 11

## வலுவுள்ள என் அம்மா

உள்ளே உயிர் வளர்த்து
உதிரத்தைப் பாலாக்கி
அள்ளிடும் போது அன்பினை
சேர்த்து எடுத்து.

பத்து மாதம் எனை சுமந்து
நீ பட்ட துன்பம் அளவே இல்லை
யார் பாசம் எமை விட்டு விலகினாலும்
அன்னை பாசம் என்றும் விட்டு விலகாது

துன்பங்கள் பலவற்றை சந்தித்து
சுகம் அதை எனக்களித்து
வளர்ந்த அன்பு மிகு அன்னையே
போற்றிடுவேன் உன் மலர்ப் பதத்தை.

**என். வினோதினி**
தரம் - 09





## வரம் தருவாயா அம்மா


அன்னையே நீ எனக்கு நிலா காட்டி சோறு
ஊட்டினாய் பூமித்தாய்
எம்மை தாங்குவது போல்
உன் மடியில் என்னைத் தாங்கினாய்
உன் மார்பை காலால் உதைத்த போது
என்னை மதித்து பால் ஊட்டினாய்
உன் வயிற்றில் நான் உதைத்த போது
என்னை அன்போடு அணைத்தாய்
ஒவ்வொரு ஜென்மத்திலும்
நான் உன் மகளாக நீ என் தாயாக
வர வரம் தருவாயா அம்மா.


**K. சரலினி**
தரம் - 11

# இன வெறி எப்போ தீரும்

எமது நாட்டில் நடக்கும் பிரச்சினைக்கு
எல்லாம் ஒரே காரணம் இனவெறிதான்
எமது மண் இப்போது செம்மண்ணாகி விட்டது
எத்தனையோ கோடி மக்கள் இடவசதி இன்றி
உடுப்பதற்கு உடை இன்றி உண்ணுவதற்கு
உணவு இன்றி அகதி முகாம்களில்
கையேந்தி நிற்கின்றனர் இப் பிரச்சினையில்
எத்தனையோ கோடி மக்கள்
அழிகின்றனர் இதற்கெல்லாம்
காரணம் இன வெறி இந்த இன வெறி
எப்போது தீரும் ?

V. நிஷானி
தரம் - 10






# காவுகொண்ட கடல்

அம்மா நீ எங்கே
அப்பா நீ எங்கே
உங்களைப் பிரிந்து
வாடுகின்றோம்
கடலில் எழுந்த
சீற்றத்தினால்
நிம்மதியின்றி வாடுகின்றோம்.

உறவுகள் இழந்தோம்
உடமைகள் இழந்தோம்
வீடுகளையும் இழந்து விட்டோம்
இனிமேல் வாழ்வில் எதுவுமில்லை
என்ற நிலையை அடைந்து விட்டோம்.

கடலே உன் மடியில்
மணல் வீடு கட்டி விளையாடிய
என் நண்பிகளை
உந்தன் அகோரத்தினால்
காவு கொண்ட மர்மம் என்ன.

U. குணரதி
தரம் - 9

# கொடுஞ்செயல்

அழகிய பெயர் கொண்ட அலையே
நீ சீற்றங் கொண்டு பாய்ந்ததேன்
உன் கொடூரச் செயலால்
பல மக்கள் அழிந்துள்ளனர்.

உன் கொடூர வெறியினால்
மக்கள் பலர் தமது உடமைகளையும்
உறவுகளையும் பிரிந்து
கண்ணீர் வடிக்கின்றனர்.

உனது பெயரைப் பார்த்தால்
மிகவும் அழகாக உள்ளது
ஆனால் உனது செயலோ
மிகவும் கொடுமையானது

உடனே நீ வந்து உனது
பெயரை நிலை நாட்டி விட்டு
சென்றாய் ஆனால் உனது
அழகிய பெயரால் இன்று
உலகம் முழுவதும் நினைவு மலர்கள்

M. பேரிதா
தரம் - 10

கல்வி என்பது மூன்றெழுத்து
கல்வியை யாராலும் திருடவோ
அல்லது பணம் கொடுத்து
பறிக்கவோ முடியாது
செல்வத்திலே சிறந்த செல்வம்
கல்விச் செல்வம்
எம் கூட வருவது ஒன்றே ஒன்று
அது தான் கல்வி.

V. நிஷானி
தரம் - 09



# நட்பு

நதியை விட நீளமானது
கடலை விட ஆழமானது
தேனை விட இனிமையானது
பாசத்தை விட மேலானது
அது என்னவென்று தெரியுமா
அது தான் என் நட்பு
நட்பை யாராலும்
கைது செய்ய முடியாது

L. அனுஷா
தரம் - 10

# பிரிவு

பல திசையிலே பிறந்தோம்
இல்லத்தில் இணைந்தோம்.
நட்பு என்ற சொல்லுக்கு - புது
இலக்கணம் கண்டோம்.
இன்று காலத்தின்
சதியினால் பிரிகின்றோம்.

V. நிஷானி
தரம் - 09

# முயற்சியே வெற்றியின் முதல்படி


" ஓர் அழகான சிற்றூர். அந்த ஊரில் ஓர் விவசாயி இருந்தார். அவருக்கு ஓர் மகள் இருந்தாள். அது ஓர் ஏழைக் குடும்பம். அவள் நன்றாக படிப்பாள். அவளின் பெயர் வாணி. வாணிக்கு படிக்க ஆசை. ஆனால் அவளின் குடும்பம் மிகவும் வறிய குடும்பம். வாணியின் அம்மா நோய் வாய்ப்பட்டு இறந்து விட்டார். அவளின் தந்தைதான் வாணியை கவனித்து வந்தார். வாணி ஒரு நாளும் பாடசாலைக்கு போனதே கிடையாது அவளின் தந்தையோடு வயல் வேலைக்கு போய் விடுவாள். வாணியின் நெஞ்சுக்குள் ஓர் ஏக்கம் பாடசாலைக்கு போக வேண்டுமென்று அவள் ஒவ்வொரு நாளும் பாடசாலை செல்லும் சிறுவர்களை பார்த்ததும் கவலை கொள்வாள். அவள் அப்படிப் பார்த்துக் கொண்டிருக்கும் போது அவள் தந்தை வந்தார். அம்மா வாணி எனக்கும் தெரியும் உன் நிலமை



நீ அப்படி போனால் அங்குள்ள பரீட்சைக் கட்டணம் எல்லாம் எப்படி கட்டுவது நாம் எங்கே பணம் எடுப்போம். என்று சொல்லி அழுதார். அப்போது வாணி ஏன் அப்பா அழுகின்றீர்கள். நான் எப்போதும் உங்களோடு இருப்பேன் என்றாள். அப்போது அங்கு வந்த வாணியின் நண்பி கமலினி அவளைக் கண்டு ஆனந்தமடைந்தாள். வாணி சொன்னாள் கமலினி நீயெல்லாம் பாடசாலையில் நன்றாக படிக்கின்றாய், ஆனால் நான் கஷ்டத்தை அனுபவித்து அனுபவித்து வேலை செய்கிறேன். எனக்கு ஏதாவது ஒரு உதவி பண்ணி என்னை பாடசாலையில் சேர்த்து விடன் என்றாள். அப்போது கமலினி வாணி நான் எனக்கு தெரிந்த சிறுவர் பொறுப்பதிகாரி ஒருவர் இருக்கிறார். அவரிடம் சொல்லி உனக்கு பாடசாலையில் கல்வி பயில முயற்சிக்கிறேன் என்றாள். உடனே ஆனந்தமடைந்த வாணி அவளுக்கு நன்றி தெரிவித்தாள் வாணியின் தந்தையும் மகிழ்ச்சியடைந்தார். வாணி பாடசாலைக்கு வர எல்லா ஏற்பாடுகளையும் செய்தார். அவளே வகுப்பில் முதலாவதாக வந்தாள் எல்லோரும் மகிழ்ச்சியடைந்தனர். அவள் கமலினிக்கும் பொறுப்பதிகாரிக்கும் நன்றி சொன்னாள். அதன் பிறகு நன்றாக படித்து நல்ல வேலை எடுத்து பல துறைகளிலும் வேலை செய்தாள். அவள் அப்பா இதையெல்லாம் பார்த்து சந்தோசம் கொண்டார். அவளுக்கு உதவியாக கமலினியும் இருந்தாள் அவள் வாழ்க்கை சந்தோஷம் அடைந்தது. நாமும் முயற்சி எடுத்து படித்தால் வாழ்க்கையில் முன்னேறலாம்.

செ.சுஜானி
தரம் – 09

# எனது கிராமம்



எனது கிராமம் அம்பாறை மாவட்டத்தில் நிந்தவூர் பிரதேசத்தில் கிழக்கே நீலக்கம்பளம் விரித்தாற் போல் காணப்படும் அட்டப்பள்ளம் ஆகும்.

அழகிய நெடுந்தூரம் செல்கின்ற கடற்கரையும் தெற்கினில் பச்சை பசேலெனத் தென்படும் வேளாண்மைகளும் மேற்கினில் சலசல என இன்னிசையுடன் செல்லும் ஆறுகளும், குளங்களும், நீரோடைகளும், வடக்கினில் வயல்வெளிகளும், இயற்கை அன்னை தந்த பெரிய பனைமரங்களும், தென்னை மரங்களும் நிறைந்து பார்ப்பவர்களின் கண்களுக்கு குளிர்ச்சியை தரும் அழகு மிக்க கிராமமாகும்.

அக்கிராமத்தின் அதிவிஷேசம் என்ன வென்றால் தமிழ், முஸ்லிம், சிங்கள இன மக்கள் சேர்ந்து ஒற்றுமையுடன் வாழும் தன்மை ஆகும்.

பிரசித்தி பெற்ற சக்தி மிக்க மாரியம்மன் ஆலயமும், விநாயகர் ஆலயமும் இக்கிராமத் திற்கு மேலும் மெருகூட்டுகின்றது. எனது கிராமத்தில் 260 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் வசித்து வருகின்றார்கள். இங்கு இரண்டு பள்ளி வாசல்கள் காணப்படுகின்றன. அது மட்டு மல்லாமல் ஒளிக்கதிர் தெரிக்கின்ற இரு பாடசாலைகள் உள்ளன.

அக்கிராம மக்கள் அனைவரும் ஒரு தாய் மக்கள் போன்று இன, மத பேதமின்றி வாழுகின்றனர். எமது கிராமத்தில் பொது நூலகங்கள் மூன்று காணப்படுகின்றன. பல சிறுவர் கழகங்கள் அக்கிராமத்தில் வசிக்கும் சிறுவர்களின் வளர்ச்சிக்கு பணி புரிகின்றன. எனதுகிராம மக்கள் மிகவும் அன்புள்ள மக்களாவர்.

எமது கிராமத்தில் பெரிய எட்டு பள்ளங்கள் காணப்பட்டதால் அட்டப்பள்ளம் என்னும் பெயர் பெற்றது எனக் கூறுவர்.

இங்குள்ள மக்கள் விவசாயத் தொழிலையே பிரதான தொழிலாக செய்து வருகின்றனர். பெண்கள் தையல்வேலைகளை செய்கின்றனர்.

**சி. வினோதினி**

# உறவு

பணத்தின் உயர்வாலும்
பண்பாட்டின் வேறுபாட்டாலும்
பகட்டான வாழ்வை முன்னிட்டு
பாழாகிப் போகும் உறவுகள்
பாசத்தின் அருமை தெரியாமல்
நாசமாய் போகின்றனர்.
ஆடம்பரமாய் வாழ்ந்த போதிலும்
அந்நியன் போல் பார்ப்பதும்
அவஸ்தைப் படுவதும்
ஐயையோ பாவம்
பரிதாபமாய் இருக்கிறது - என்
உறவுகளின் நிலை இன்று ...

எஸ்.சுசிலா



# தாய்


இறைவனால் உலகிற்கு அருளப்பட்ட
அதியுயர் சொத்து தாய்தான்
இப்பூமியில் மலர்ந்த தெய்வம் அவள்
இப்பூமியிலே என்னை ஈன்றெடுத்தவள்
அகிலத்தில் நான் வாழ தன் குருதியை
தானமாகக் கொடுப்பவளே அன்னை

கண்ணுக்குப் புலப்படும்
கடவுளாக விளங்கும்
உன் தாயை நீ வழிபட முடியாவிட்டால்
கண்ணுக்குப் புலப்படாமல்
மறைந்துள்ள கடவுளை
நீ எப்படி வழிபடமுடியும்
பத்துமாதம் என்னைச் சுமந்தவள் தாய்
பத்திரமாக என்னை வளர்த்தவள் தாய்

நான் ஒளிர உருகும் என் தாய்
அவள் உதிரத்தில் உருவான
கண்போல காத்திடுவாள்
தாயே எனது இரு கண்கள்
உன்னைத் தெய்வம்
எனப் போற்றவா - தாயே
உனக்கு மலர் மாலை சூட்டவா - தாயே
உன் பாதம் வணங்கவா - தாயே
உனக்கெனவே நான் வாழவா - தாயே.

தி. மாலினி

# நண்பி



தென்றலாய் வந்தாய்
வசந்தமாய் இருந்தது
நட்பெனும் சுனாமியாய் வந்தாய்
சுகந்தமாய் இருந்தது
கவலையில் இருந்த போது
களிப்புறச் செய்தாய்
பேதையாய் இருந்த போது
மேதையாக்கினாய்
பொதுவான அறிவுகளை
புலப்படச் செய்தாய்
நல்வழிகாட்டிப் பல
நன்மைகள் செய்தாய்
நெஞ்சிருக்கும் வரை
நினைவிருக்கச் செய்தாய்
சந்தர்ப்ப சூழ்நிலையால்
நாளை பிரிவென வந்தாய்
இன்று பகீரென என்மனம்
தாங்கொணாத்துயரத்தில்
கண்ணீரைச் சொரிந்தது.

தி. மாலினி

# சமாதானமே நீ மலர்வாயா?


ரோஜாவின் தென்றல்
தோள்மீது பாய
துள்ளல் மனசோடு
நடை போட்டு
துன்பமற்ற உலகம் கண்டு
நிம்மதியாய் துணியும்
காலம் எப்போ வரும்?
சமாதானமே மலர்வாயா?

சாதனைகளை முடக்கி
சன்மானங்களைக் கொடுத்து
அமைதியைக் குலைத்து
அடிமையாய் நடத்தும்
காலம் அழிவதெப்போ?
சமாதானம் வருவதெப்போ?
மரணத்தின் அவலம் அகன்று


மானத்தோடு சிறப்பாக
மனமுருக மகிழ்வுடன்
வாழும் காலம் தான் வராதோ?
அதை அள்ளித் தரும்
சமாதானம் தான் வராதோ?

சமாதானப் பூங்காற்றே
உன் கைகளால்
எமை வருடி தாலாட்டுப் பாடு
நாம் தூங்க! - எம்
எதிர்பார்ப்பு ஈடேறுமா
சமாதானமே நீ மலர்வாயா?

எஸ். தர்ஷினிதேவி



# சமாதானம் தேடி



தினம் கானல் நீராகும்
கனவுகளும்
நிரந்தர வசிப்பிடம் தேடும்
சோகங்களும்,
மனித வாழ்வின்
சொர்க்கத்தை தடுக்கிறது
இதுவே யுத்த அரக்கன் தரும்
ஆயுள் தண்டனை

உள்ளத்தின் அலறல்கள்
வெளிவந்தது கண்ணீராக
உறங்கிய உதிரம் பரந்தது
சோகமாக
நம் மண்ணிலே மனிதர்
நடைப்பிணமாய் வாழ்கின்றனர்
யுத்தத்தை எதிர்த்து தேடுகின்றனர்
சமாதானத்தை

அகதி வாழ்வை அதிகரிக்கச் செய்யும்
கொடிய யுத்தமே

உன்னால் சுகமிழந்து,
சொத்திழந்து தவிப்போர்
எத்தனை பேர்
மக்கள் அநாதைகளாய்
அல்லலுற்று அலைகின்றனர்
சொந்தங்களைத்
தேடி செல்கின்றனர் உன்னால்
சுடுகாடு நோக்கி.


ஐந்து வயசுக்குழந்தை
பிஞ்சுக்கரம் நீட்டுகிறது
விரைந்து வாராயோ?
சமாதானமே!
வேதனைகளைத் தாங்கி
விடியலுக்காய் நாங்கள்
விண்மீன்களாய் தவம் இருக்கின்றோம்
விரைந்து வா சமாதானமே.


எஸ்.தர்சினிதேவி

# வல்லமை தாராயோ . . . ?

இனப்பிரச்சினைகள் - பல
இன்னல்களை ஏற்படுத்த,
மாணவராகிய நாம் கல்விதனை
கச்சிதமாய் இழந்து,
கண்ணீர்தனைச் சொரிகின்றோம்.
கண்ணி வெடிகள் மத்தியிலே
அவலம் நிறைந்த அகதிகளாய் - நாம்
அல்லலுறும் காட்சி கண்டு இறைவா நீ
வல்லமையைத் தாராயோ . . . ?

வேட்டுக்கள் தீர்ப்பவர் ஒரு சாரார்
வேதனையடைவோர் மற்றொரு சாரார்
வேண்டியவை கிடைக்கவில்லை-
இருப்பினும் 'அகதி' எனும்
பொதுப் பெயரை வேண்டாமலே
பெற்றுக் கொண்டோம்.
மாந்தர் யாவரும் மலர்களல்ல - ஏனெனில்
கசக்கியதும் உதிர்ந்து போக
சோகங்களை சொப்பனமாக மறந்து போக
இறைவா நீ வல்லமையைத் தாராயோ...?





# பெண்ணே நீ

பெட்டகப் பாம்பென்று
பாரிலுள்ளோர் பரிந்து பேசும் வண்ணம்
பேதையாய் இருந்தாயடி அன்று நீ

பாடசாலைப் பருவமதில்
பானைதனில் உலைவைத்து
பக்குவமாய் சமைத்தெடுத்து
பந்தி தன்னில் பரிமாறும் பண்புள்ள
பெண்ணாக
இருந்தாயடி அன்று நீ

இன்பமாகக் குலாவிடும் வயதுதனில்
இல்லறமதில் பலவற்றை எதிர்கொண்டு
இது தான் வாழ்க்கை என்றெண்ணி
எதுவுமறியாப் பெண்ணாக
இருந்தாயடி அன்று நீ

பெண்கள் என்ன சாகப்பிறந்தனரா?
சாதிக்கப் பிறந்தவர்கள் என
உண்மையை உணர்த்தி
உயர்ந்து விட்டாயடி
உலகமதில், இன்று நீ

ச. சத்தியராஜி
தரம் - 12

# எதுவும் சில காலந்தான்

ஆஹா! என்னவொரு அழகிய பசுமை நிறைந்த கிராமம். பார்க்கும் திசைகளெல்லாம் பச்சைப்பசேல் என்ற வயல் வெளிகள் பெண்களின் கூந்தலைப்போல் நீளமாக வளைந்து நெளிந்து நெளிந்து செல்லும் ஆறுகளும், அருவிகளும் ஆங்காங்கு தென்படுகின்றது. கீச்சிடும் குருவிகளினது ஓசையும், ரீங்காரம் செய்யும் வண்டுகளினதும் ஓசையும் இங்குள்ள பசுமையையும் அமைதி யையுமே உணர்த்துகின்றது. வசந்தகாலம் என்பது வருடத்தில் ஒரு தடவைதான்வரும். ஆனால் இந்தக் கிராமத்தைப் பொறுத்தமட்டில் நாள்தோறும் வசந்தகாலந்தான். இத்தகைய அழகு நிறைந்த கிராமந்தான் பூஞ்சோலை எனும் கிராமமாகும்.

இந்தக்கிராமத்தில் வாழ்ந்துவந்த மக்கள் விநாயகப்பெருமானை துதித்து வாழ்ந்து வந்தார்கள். இந்த அழகிய கிராமத்தில் காயத்திரி, அபிராமி என்ற இரு நண்பிகள் வாழ்ந்து வந்தார்கள். இவர்கள் இருவரும் ஆழ்கடலைப் போல் ஆழமான அன்பினைக் கொண்டிருந்தனர். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு உடையவர்கள் காயத்திரியின் அப்பா கிராமத்துத்தலைவர். இவளுக்கு சகோதரர்கள் எவரும் இல்லை. வீட்டின் செல்லப்பிள்ளையாகவே வளர்ந்து வந்தாள். இவளுடைய தாயும், தந்தையும் இவள் மீது அளவுகடந்த அன்பு கொண்டிருந்தார்கள். அபிராமியின் தந்தை கோயிலின் நிர்வாகத் தலைவராவார். இவளுக்கு ஒரு தம்பியும், தங்கையும் உண்டு. இவளது அப்பா இவளது சகோதரர்களை பட்டணத்திற்கு அனுப்பிவைத்தார். ஆகவே இவளுடைய வீட்டில் இவள் தாய், தந்தைக்கு செல்லப்பிள்ளையாகவே வளர்ந்து வந்தாள். காயத்திரியும், அபிராமியும் ஒரே பாடசாலையில் படித்து வந்தார்கள். இவர்கள் இருவரின் தந்தை மார்களும் சகோதரர்களாகவே இருந்தனர். காயத்திரியும், அபிராமியும் திறமைசாலிகளா கவும், சுறு சுறுப்பாகவும் இருந்தனர்.

பாடசாலை நாட்களில் இவர்கள் இருவரும் கோயிலுக்குச் செல்லுவது வழக்கம் இருவரும் கோயிலைக் கூட்டிச் சுத்தம் செய்வர். ஐயர் வரும் வரைக்கும் சற்று அமர்ந்திருப்பர். ஐயர் பூசை செய்யும் போது இறைவனைப் பிராத்தனை செய்து விட்டு இருவரும் வீடு திரும்புவார்கள். நட்பிற்கே இலக்கணம் இவர்கள் இருவரும் தான் கோயிலுக்குச் செல்லும் போது காயத்திரி பேசிக் கொள்ளும் வார்த்தை இதுதான். "வானம் உள்ளவரை காற்று உள்ளவரை என்றைக்கும் நம் நட்புப் பிரியக் கூடாது." அபிராமியும் அதற்குத்தலைய சைத்துக் கொண்டிருப்பாள்.

இவர்களுடைய கிராமத்தில் இன்னும் சில நாட்களில் திருவிழா ஆரம்பிக்கப் போகிறது. இதற்குப் பொறுப்பாக பெண்களில் யாரைத் தெரிவு செய்யலாம் என அபிராமியின் அப்பா கூறினார். சிறிது நேரம் யோசித்து விட்டு சில பெயர்களை எழுதி சீட்டுக்குலுக்கினார். அதில் இருந்து ஒரு சீட்டை எடுத்துப்பார்த்த போது காயத்திரி என்ற பெயர் வந்திருந்தது. அபிராமியின் முகம் சில நொடிகளில் வாடிய பூவைப்போல் தோன்றியது. இதைப் பார்த்த காயத்திரி மலர்ந்த முகத்துடன் அபிராமிக்காக தலைமைத்துவத்தை விட்டுக்கொடுத்தாள். இவர்கள் இருவருமாக பணத்தைச் சேர்த்து கோயிலில் அலங்கார வேலைகளைச் செய்தார்கள் இந்த வருடம் கோயில் அலங்கார வேலைகள் மிகவும் சிறப்பான முறையில் அலங்கரிக்கப்பட்டிருந்தன. எல்லோரும் அபிராமியை பாராட்டினார்கள். இதைக் கேட்ட அபிராமி தன்னைவிடவேறு எவரும் தலைமைப்பதவி வகிக்க முடியாது என எண்ணிக் கொண்டாள். அபிராமி, காயத்திரியை


வைத்துப்பல வேலைகளைச் செய்து முடித்தாள்.

காலம் பட்டாம் பூச்சியைப் போல் சிறகடித்துப் பறந்தது. பாடசாலையில் உயர் தரப்பரீட்சையும் நெருங்கிவிட்டது. காயத்திரி அபிராமியின் வீட்டிற்கு சென்று அபிராமியை அழைத்தாள். வீட்டில் அபிராமி இல்லை யம்மா . . . என்றாள் அபிராமியின் அம்மா அபிராமி என்னை விட்டுவிட்டு எங்கும் செல்ல மாட்டாளே என காயத்திரி மனதில் எண்ணினாள். சரி என்று பாடசாலைக்குச் சென்றாள். அங்கு சென்று பார்த்த போது அபிராமி இருந்தாள். காயத்திரி அபிராமியிடம் சென்று ஏன் நீ என்னிடம் சொல்லாமல் தனியே வந்தாய் என்றாள். அதற்கு அபிராமி மறந்துவிட்டேன் என்றாள்.

இந்தவேளையில் காயத்திரியின் மாமா ஓடி வந்தார். காயத்திரி உன் அப்பா. . . உன் அப்பா . . . என்று இழுத்துக் கொண்டு அழுதார். காயத்திரியின் நெஞ்சு படபடத்தபடி என்ன என்றாள் அதற்கு அப்பா இறந்துவிட்டார் என்றார். காயத்திரி அழுத முகத்துடன் வீட்டிற்குச் சென்று அப்பாவைப் பார்த்து அழுதாள். சிறிது நேரம் அபிராமி வந்தாள். அபிராமியிடம் நடந்தவற்றை யெல்லாம் சொல்லியழுதாள். அபிராமி ஓரிரு வார்த்தை ஆறுதலாகக் கூறிவிட்டுச் சென்றாள். காயத்திரியின் தந்தையின் காரியம் எல்லாம் முடிந்துவிட்டது. அன்று வந்த அபிராமி அதற்கு பிறகு காயத்திரியின் வீட்டிற்கு வரவில்லை. நாளை மறுதினம் பரீட்சை ஆரம்பமாகவுள்ளது. அபிராமி தன்னைத் தயார்படுத்திக் கொண்டாள். இக்கட்டான சூழ்நிலையிலும் காயத்திரியும் தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டாள். இருவரும் வேறு வேறாக பரீட்சைக்குத் தோற்றினார்கள்.

ஒரு வாரத்தில் பரீட்சை முடிந்தது. மூன்று மாதத்திற்குள் பரீட்சை முடிவுகள் வந்தன. இருவருக்கும் விஞ்ஞானத் துறையில் சித்தி பெற்று பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்புக்கிடைத்தது. அபிராமி மேற்படிப்புக் காகச் சென்றுவிட்டாள். காயத்திரியால் படிப்பினை மேற்கொள்ள பணமில்லை. அபிராமியிடம் உதவி கேட்ட போது அபிராமி முகத்திற்கு எதிரே எங்களிடம் பணமரமா உள்ளது என்றாள். உயிருக்குயிராகப் பழகிய நண்பி அவளைப் பார்க்கவுமில்லை, உதவவு மில்லை. பணத்துடன் இருக்கும் போது பழைய அபிராமி அடியோடு மறந்துவிட்டாள். இவர்களுடைய இலக்கணம் சிதறு தேங்காய் போல் சிதறியது.

**தி.ஜெயசித்திரா**
தரம் – 12



# தாயின் தன்னலமற்ற தூய அன்பு

அதிகாலை வேளையிலே சேவல் கூவியது. எழும்பவே மனமில்லாது தனது கடமையுணர்வை நினைத்து தொழிலுக்கு புறப்படத் தயாரானான் வேலன். மனைவி கண்ணம்மாவும் அதிகாலையில் எழுந்து கணவரை வழியனுப்ப தயாரானாள்.

குழந்தை சபேஷன் புறவுலகே தெரியாது ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். மிகவும் மகிழ்வுடன் காலம் கழித்து வந்தது அக் குடும்பம். அளவான குடும்பம் வாழ்க்கை சீராக செல்வதற்கு அயராத உழைப்பு என மிக மகிழ்ச்சிகரமான சூழ்நிலையில் இருந்தது.

ஆனாலும் அந்த சந்தோஷம் பல நாட்கள் நீடிக்கவில்லை. ஒரு கணப்பொழுதிலே காலன் சந்தோஷத்தை தட்டிப் பறித்துச் சென்று விட்டான். அதிகாலையில் சந்தோஷமாகச் சென்ற வேலன் மாலையிலே பிணமாகவே வீட்டிற்குக் கொண்டு வரப்பட்டான்.

கணவன் இறந்த துயரம் ஒரு புறம் இருந்தாலும் தனது குழந்தையை வளர்த் தெடுப்பது பற்றியே சதா சிந்திக்க தொடங் கினாள். இருந்த செல்வமெல்லாம் சிறிது சிறிதாக குறைந்து விட்டது. வறுமைக் கோட்டின் கீழ் தள்ளப்பட்ட போதும் வீட்டு வேலை செய்தும் சுயதொழில் செய்தும் தனது மகனைப் படாத பாடுபட்டு படிப்பித்தாள்.

அவளது போராட்டத்திற்கு பலனும் கிடைத்தது. மகனும் படித்து பட்டம் பெற்று பெரியவனானான். அவனது தாய் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அவன் தனக்கான துணையை தானே தேடிக் கொண்டு இன்பமாக காலம் கழித்து வந்தான். அப்போது தான் கண்ணம்மாவின் பக்கம் புயல்வீசத் தொடங் கியது. படிப்படியாக தாயை விட்டு விலகி இருக்கத்தொடங்கினான். அவனோ மாளிகையில் மனைவி பிள்ளையுடன் வாழ, தாயோ அதே குடிசையில் முடங்கிக் கிடந்தாள்.

தாயை ஒரு பொருட்டாகவே அவன் எடுக்கவில்லை. காலங்கள் பல கடந்து சென்று விட்டன. அவனது மகள் ஐந்து வயதை தாண்டி விட்டிருந்தாள். அவள் எந்நேரமும் பாட்டியுடனே இருப்பாள். பாட்டி மீது கொள்ளைப் பிரியம். கண்ணம்மாவுக்கும் பேத்தி மீது அளவு கடந்த பாசம். சலிக்காமல் பல கதைகள், பாட்டுக்கள் என நிறையவே சொல்லுவாள். பாடசாலை விட்டு வந்ததும் பாட்டி பாட்டி என்று கூறிக் கொண்டே ஓடி வருவாள்.

ஒரு நாள் அதிகாலையிலே சபேஷனின் மனைவி குழந்தையை குளிப்பாட்டுவதற்காக அவளது அறைக்கு தேடிப் போனாள். குழந்தையைக் காணவில்லை. அன்று இரவு பலத்த காற்றுடன் கூடிய மழை வேறு பெய்து கொண்டிருந்தது. அவளைப் பயம் பிடித்துக் கொண்டது. வீடு முழுவதும் தேடினாள். குழந்தை கிடைக்கவில்லை. சபேஷன் மனைவியின் பதற்றத்தை பார்த்து ஏன்? என்ன நடந்தது? எனக் கேட்டான் குழந்தையைக் காணவில்லை என்றதும் ஒரு கணம் அப்படியே விக்கித்து நின்றான்.

பல இடங்களிலும் தேடினான். குழந்தை விளையாடும் இடம், போகின்ற இடங்கள் என பல இடங்களில் தேடியும் கிடைக்கவில்லை. களைத்து சோர்ந்து போய் இருந்த போது அவர்களது பெரிய பங்களாவிற்கு பின்னால் ஒரு தட்டும் சத்தம் கேட்டது. என்ன நடக்கின்றது என்று பார்ப்போம் என சொல்லிக்கொண்டு சபேஷனும் மனைவியும் போனார்கள். அங்கே மகள் மூன்று ஆட்களை வைத்துக் கொண்டு ஓலையாலே வீடு கட்டிக் கொண்டு இருந்தாள்.

சபேஷனின் மனைவிக்கு பொல்லாத கோபம் வந்தது. மகளிடம் போய் இரண்டு அடிகள் முதுகிலே போட்டாள். குழந்தை அழத்



தொடங்கி விட்டது. உடனே சபேஷன் அவளை அடிக்காதே எனக் கூறிக்கொண்டு வந்து மகளை அன்போடு அணைத்துக்கொண்டு கேட்டான். ஏனம்மா நாம் இருப்பதற்குத் தான் இந்தப் பெரிய மாளிகை இருக்கிறதே. எதற்காக இங்கு குடிசை கட்டிக் கொண்டிருக்கிறாய் எனக் கேட்டான்.

உடனே குழந்தை அப்பா பாட்டிக்கு வயசானதால தானே பாட்டிய குடிசையில போட்டிருக் கீங்க நானும் படிச்சு பெரியாளா வந்ததுக்கு பிறகு உங்களுக்கும் வயசாகி விடும் அல்லவா? அப்போது நான் உங்களை தங்க வைக்க வேண்டும் இல்லையா அதற்காகத் தான் வீடு கட்டிக் கொண்டு இருக்கிறேன் என சாதாரணமாக சொன்னாள்.

சபேஷனுக்கு திகீரென்று இருந்தது. அப்போது தான் அவனுக்கு தாயின் ஞாபகம் வந்தது. தான் எவ்வளவு தூரம் அவளை ஒதுக்கியும் ஒரு நாள் கூட அம்மா என்னைப் பற்றி ஒன்றுமே கேட்கவில்லையே. எவ்வளவோ கஷ்டத்தின் மத்தியில் தன்னைப் பாடுபட்டு வளர்த்ததை எண்ணிய போது அவனது கண்கள் குளமாகியது. தனது மகளுக்கு இருக்கும் கரிசனை கூட தன்னை பெற்று வளர்த்து ஆளாக்கிய அம்மாவின் மீது தனக்கில்லையே என நினைத்து தலை குனிந்தான்.


மறுகணமே தனது தாயின் இருப்பிடத்துக்கு விரைந்தான். தாயின் காலடியில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து அழுதான். தாய் அவனை எழுப்பி கனிவோடு பேசினாள். நீ எனக்கு எந்த கெடுதலும் செய்யவில்லையே. வயதான பெற்றோரைத் துரத்திவிடும் காலத்தில் எனக்கு உனது வீட்டுக்கு அருகிலே குடிசை அமைத்து என்னை அங்கு தங்க வைத்ததே பெரிய விடயம் எனக் கூறி மகனைத் தேற்றியனுப்பினாள்.

புயல் வீசிய கண்ணம்மாவின் வாழ்வு புயலகன்று மீண்டும் வசந்தம் வீசத்துவங்கி இருக்கும் எனக் கூற வேண்டியதே இல்லை அல்லவா.

**கோ. அனுஷியா**
தரம் – 12

# முந்திரியம் காய்க் கறி

(சமையல் குறிப்பு)



**தேவையான - பொருட்கள்**

முந்திரியம் காய் - 1/2 kg
தேங்காய் - 1
தேவையான அளவு உப்பு
மிளகாய் - 15
வெங்காயம் - 5
தேவையான அளவு புளி
தேங்காய் எண்ணெய் - 5 தேக்கரண்டி
கருவேப்பிலை தேவையான அளவு
சீரகம் தேவையான அளவு
மஞ்சள் சிறிதளவு

**செய்முறை :-**


தண்டுக்காயை வெட்டி துப்புரவு செய்து எடுத்துவிட்டு அவற்றை ஒரு பாத்திரத்தில் எடுக்கவேண்டும். வெட்டி எடுத்த தண்டுக்காயை தேவையான அளவு உப்பும், மிளகாயும் இட்டு அவியவைத்தல் வேண்டும். பின்னர் சீரகம், கடுகு, கருவேப்பிலை, வெங்காயம், எண்ணெயும் விட்டு வெதப்புதல் வேண்டும். பின்பு புளி, தண்ணிப்பால், சிறிதளவு மஞ்சள் போன்றவற்றை இட்டு கொதிக்கவைத்தல். நன்றாகக் கொதித்த பின்பு தலைப்பாலை இட்டுக் கொதிக்கவைத்தல் பின் நறுமணம் வீசும்போது கறியை இறக்கிவைத்து அதன் பின் பரிமாறிக் கொள்ளலாம்.

**முக்கிய குறிப்பு :-**

இதனைச் சோற்றுடன் பரிமாறிக் கொள்ளலாம். புரதமும், கொழுப்பும் நிறைந்த உணவாகும்.

**கோ. சுஜீதா**
தரம் - 12

# பிள்ளையார் கட்டை விளையாட்டு



பிள்ளையார் கட்டை எனும் விளையாட்டு கிராமங்களில் விளையாடப்படும் விளையாட்டுக்களுள் ஒன்றாகும். கிராமத்தில் சிறுவர்களால் இது மிகவும் சுவாரஸ்யமான ஒரு விளையாட்டாக ஆடப்படும். சிறுவர்கள் மட்டுமின்றி இளைஞர்களும் கூட இதனை விரும்பி விளையாடுவார்கள்.

பிள்ளையார் கட்டை விளையாடும் போது சமமாக இரு குழுக்களாகப் பிரிந்து செயற்பட வேண்டும். பந்து, சிரட்டை அல்லது தகரப்பேணி செங்கல் என்பவற்றைக் கொண்டு இதை ஆடனும் சிரட்டையை முழுமையாகவும் பாவிக்கலாம். அல்லது துண்டுகளாக உடைத்தும் பயன்படுத்தலாம். அல்லது தகரப்பேணிகளையும் பயன்படுத்தலாம்.

இரு குழுவும் இரு எல்லைகளில் நேர் கோட்டில் நிற்க சம அளவு தூரத்தின் நடுவில் செங்கல்லை நேராக வைத்து அதன் மேல் சிரட்டைகளை அல்லது சிரட்டைத் துண்டுகளை அல்லது தகரப் பேணிகளை அடுக்கி வைத்தல் வேண்டும். பின் யார் முதலில் பந்தை எடுப்பது எனத் தீர்மானித்ததும் Aக் குழு செங்கல்லை பந்தினால் எறிந்து விழச் செய்ய Bக் குழு அதனை அடுக்க வேண்டும்.

இவ்வாறு அடுக்கும் வேளையில் Aக் குழு எறியும் பந்துகளுக்கு அகப்படாமல் Bக் குழு விலகி விலகி அடுக்க வேண்டும். அதேவேளை அடுக்கும் வேளையில் அந்தப் பந்தினை Bக் குழு பிடித்தால் தாம் அடுக்குவதை நிறுத்தி விட்டு Aக் குழுவினர்களை மீண்டும் அடுக்கச் செய்யலாம்.

Aக் குழுவோ அல்லது Bக் குழுவோ முடித்த பின் தங்களது இடத்தில் நின்று கைகளைத் தட்டி வெற்றியை தனதாக்கி கொள்வர். இவ்வாறாக இவ் விளையாட்டை நாம் விளையாடலாம்.

**இவ் விளையாட்டினால் ஏற்படும் நன்மைகள்**

1. உடலுக்கு சுறுசுறுப்பு ஏற்படும்.
2. உடல் ஆரோக்கியம் பெறும்.
3. மன ஒருமைப்பாடு ஏற்படும்.

**தீமைகள்**

1. வேகமாக பந்தை எறிந்தால் உடலில் பட்டு ஆபத்துக்கள் ஏற்படும்.

**பி. கல்யாணி**

# வாழ்க்கை வாழ்வதற்கே

மக்கள் தம் உடமைகளையும் உடன் பிறப்புக்களையும் இழந்து தனி மரமாக நின்று தவிக்கும் நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் காலம் என்று வரும்.

கல்வியைகற்க வேண்டிய சிறார்கள் யுத்தம் வந்தவுடன் எவ்வாறு தம்மை பாதுகாக்க வேண்டும் என்பதைப் பற்றிக் கற்க வேண்டியுள்ளது. எமக்கு சுதந்திரமாய் வாழ ஒரு இடம் வேண்டும் என்றால் அது தாயின் கருவறைதான் ஆனால் இப்போ எங்களால் கருவறையில் ஒழிய முடியவில்லை. மண்ணில் ஒழிகின்றோம். மனிதர்களாகிய நாங்கள் சுதந்திரத்தை அனுபவித்த காலம் தான் எவ்வளவு நூற்றிற்கு ஒருவீதமான சுதந்திரத்தை தான் மிகுதி 99வீதமும் வெறும் துன்பத்தை மட்டும் அனுபவித்துக் கொண்டு வருகின்றோம்.

இன்று எமது நாட்டில் மனிதர்களின் நிலையோ மிக பரிதாபகரமான நிலையில் உள்ளது. தண்ணீராக ஓடிய கடல்கள் இப்போ செந்நீராக மாறும் ஒரு அபாயகரமான நிலையில் உள்ளது. எங்கு பார்த்தாலும் மனித உடல்கள், உடல் அங்கங்கள் அங்கும் இங்கும் சிதறிய வண்ணம் உள்ளது. எந்த ஒரு பத்திரிகையைப் பார்த்தாலும் கட்டமிடப்பட்ட செய்தியாக இனந் தெரியாத நபரினால் படுகொலை, வல்லுறவு, கடத்தல், அகதி என்ற தலைப்புக்களைத்தான் காண முடிகின்றது. முன்னைய காலத்தில் விலங்குகள், பறவைகள் கூட இப்படிப்பட்ட அழிவை எதிர்நோக்கவில்லை. ஆனால் மனிதர்களாகிய நாங்கள் எதிர்நோக்கி வருகின்றோம்.

இப்படிப்பட்ட மரணங்கள் ஏன்? எதற்காக? என்ற கேள்விகளுக்கு எவராலும் விடைகாண முடியவில்லை. இது மனிதர்களின் விதியா? அல்லது சதித்திட்டம் தீட்டும் சில சதித்திட்டங்களின் சதியா? இது சதியா? அல்லது விதியா? என்று எவராலும் கூறமுடியவில்லை.

எமது நாட்டில் இனப்பிரச்சனையில் இரையாகக் கிடைப்பது அப்பாவி மனிதர்களின் உயிர்தானே! இதற்கு யார் பொறுப்பு? மனிதத்தையே அழித்தா சமாதானம்? பேச்சுவார்த்தை?


எமது நாட்டில் பிறந்த அனைவரும் சகோதரர்கள் என்ற எண்ணத்தைக் கை விட்டு இனம், ஜாதி, மதம் என்று வேறுபடுத்தி பார்த்தால் எமது நாடு இலங்கை என்ற அர்த்தத்தை இழந்திடும். இப்படியான ஜாதி, இன, மதப்பேதங்களை தலைவர்கள் கடைப்பிடித்தால்

சிறுவர்களாகிய நாங்கள் எதைக் கடைப்பிடிப்பது? பின்பு எப்படி எங்களிடம் சமத்துவம் பேணப்படும்? நாங்கள் அனைவரும் ஒரு தாய் பிள்ளைகள் என்ற எண்ணம் ஒவ்வொரு மனிதரிலும் தோன்ற வேண்டும்! பின்பு எங்கள் அனைவருக்கும் சமத்துவம் பேணப்படும்.

எத்தனை அரசுகள் முன்வந்தும் தீர்க்க முடியாது உள்ள இவ் இனப்பிரச்சினைக்கு தீர்வுதான் யாது? மனிதர்கள் தங்கள் பிறந்த தாய் மண்ணில் கொஞ்சிக் குலாவி மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர். ஆனால் இப்போ தங்கள் உடமைகளையும், உடன் பிறப்புக்களையும் தமது தாய் மண்ணையும் இழந்து வேறு இடம் சென்று அகதி என்ற அவலப் பெயருடனும் அநாதை என்ற ஆதரவற்ற பெயருடனும் அடிமைப்பட்டு வாழ்கின்ற நிலை் பேச்சுவார்த்தை என்பதற்கு அர்த்தம் என்ன? மனிதரை ஆணி வேருடன் அழிப்பது தானா?

மீன்பாடும் தேன் நகரம் மட்டக்களப்பு என்றழைக்கப்பட்டது. இப்போ அகதிகளின் அவலக் குரல் கேட்கும் நகரமாகி விட்டது. எமது நாட்டில் சாந்தி, சமாதானம் நிலைத்து நாங்கள் அனைவரும் ஒற்றுமையுடன் எப்போ வாழ்வோம்? இன்னும் மனிதர்களுக்கு அகதி வாழ்க்கை தானா? இன்னும் எத்தனை எத்தனை உயிர்களை பறி கொடுப்போம்? இனியும் நாங்கள் பறிகொடுக்கத் தயார் இல்லை.

**ந. அஜந்தினி**



# கல்லூரி நாட்கள்



கல்லூரி வாழ்க்கை - ஒரு
கஸ்தூரி வாசனை.
அது அன்றும் இன்றும் என்றும்
எம்முள் வாசனை வீசியபடி !

கூடிக்கதைத்த பேச்சுக்கள்
ஆசிரியர்களின்
பார்வையில் பட்டவுடன்
புத்தகத்தை ஏந்துவதும்

எந்தநேரமும் கல கலப்பு
சிலவேளை வகுப்பில் சலசலப்பு
ஆங்கிலப் பாடத்தில் ஒரு கசப்பு
இடை நடுவே பாட வேளையில் சிரிப்பு

கும்மாளச் சிரிப்புக்கள்
ஓய்வு நேர அரட்டைகள்
அரட்டைகள் அடிப்பதும்
அதட்டும் ஆசான்கள்
வகுப்பில் ஒன்று கூடி
கை கொட்டி பாடியது
முழு வகுப்பையும் ஒன்று சேர்த்து
வகுப்பில் இருந்து வெளியேற்றியது.
ஆசான்களின் தண்டனைகள்
அடிமனதில் ஆழமாய்...
அவர்களின் அதட்டல்களோ
அமிர்தம் போன்ற வார்த்தை எமக்கு.

பணிகள் என்று வந்திட்டால்
பதுங்கல் இல்லை
எதிலுமே ஒரு துணிச்சல்
துணிந்த பின் இல்லை
பின் நோக்கிய பாய்ச்சல்.


இந்த நிஜங்கள்
இனிமையான இந்த தசாப்தம்
அன்றும் இன்றும் என்றும்
இனிய நினைவுகளாய் மாத்திரமே!

சி. சிந்துஜா
தரம் - 11

*Donated By:*

amici dei bambini

Ai.Bi. - Associazione Amici dei Bambini
Association Friends of Children
In Collaboration with Probation Department,
Batticaloa.



வேதனைகளைத் தாங்கி விடியலுக்காய்
நாங்கள் விண்மீன்களாய் தவம் இருக்கின்றோம்
விரைந்து வா சமாதானமே! - எஸ். தர்சினிதேவி